**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 413 of 2025

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name :வேல்முருகன்

Father's Name : பழனிச்சாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th **day of April** 2026.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் மதுரை மாவட்டம் பேரையூர் கிளாங்குளம் என்ற ஊரில் குடியிருந்து கொண்டு தமிழ்நாடு விவசாய துறையில் பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்திலிறந்த ராஜேஷ் எனது மைத்துனர். கடந்த 22.06.2018 ஆம் தேதி காலை சுமார் 06.30 மணியளவில் விபத்து நடந்த இடத்தை நானும் எனது உறவினர் பிச்சைமணி என்பவரும் பார்ப்பதற்காக சென்ற பொழுது அங்கு வந்த சூலூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்கள் இருவர் முன்னிலையிலும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் பிச்சைமணி என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. பார்வை மகசர் **அ.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் படித்துப் பார்த்துதான் பார்வை மகசரில் கையொப்பம் செய்தேன். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும், சம்பவத்திலிறந்த ராஜேஷ் எனது மச்சான் என்பதால் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து, தற்போது வழக்கிற்காக சம்பவ இடத்தில் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் சென்ற பொழுது இரண்டு அல்லது மூன்று போலீசார் சம்பவ இடத்தில் இருந்தார்கள். பொதுமக்கள் சுமார் ஆறு அல்லது ஏழு நபர்கள் இருந்திருப்பார்கள். பொதுமக்களிடமும் போலீசார் கையொப்பம் கேட்டார்கள், நான் உறவினர் என்பதால் நான் கையொப்பம் செய்ய ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**